பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 08 புதன்கிழமை 20.04.2022 கதிர் 60

கார் விபத்தில்

## 5 வயது சிறுவன் பரிதாப மரணம்!

திருகோணமலை-ஹொரவப்பொத்தானை பிரதான வீதி நொச்சிக்குளம் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

அத்துடன் 7 பேர் காயமடைந்த 2

# கோட்டா - மஹிந்த அரசுக்கு எதிராக நாடெங்கும் இன்றும் போராட்டங்கள்





ரம்புக்கனை அராஜகத்துக்கும் கண்டனம் தெரிவிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாட்டின் பல பாகங்களில் இன்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. அரச பயங்கரவாதம் மூலம் போராட்டத்தை ஒடுக்க முடியாது என மக்கள் கோஷங்களை எழுப்பினர். 2

# நாட்டை ஆள முடியாவிட்டால் எங்களிடம் ஒப்படையுங்கள்!

## ரம்புக்கனை சம்பவத்துக்கு சபையில் சஜித் கண்டனம்




மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தி, நாட்டை ஆள முடியாவிட்டால், மாற்றுத் தரப்பினரிடம் ஆட்சியை கையளிப்பதே மேலான செயல்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ரம்புக்கனை போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டித்து நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## இலங்கைக்கு நெருக்கடி வேளை உதவும் இந்தியாவை மெச்சுகிறது நாணய நிதியம்



இலங்கை தற்போதைய தனது மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்கு நேரம் அறிந்து இந்தியா அந்த நாட்டுக்கு வழங்கி வரும் உதவிகளை மெச்சி சிலாகித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, இலங்கையுடன் தமது சர்வதேச நாணய நிதியம் செயலூக்கமான வகையில் ஈடுபட்டு, ஊடாடிச் செயற்படும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு உறுதியளித்தார்.

சர்வதேச நாணய நிதியம் - உலக வங்கி ஆகிய தரப்புகளுடன் வொஷிங்டன் டிசியில் தற்போது நடைபெறும் இளவேனில் காலக் கூட்டத் தொடரை ஒட்டி, இந்திய நிதியமைச்சர் தலைமையிலான குழு நேற்று 2

## ஒத்திவைக்கப்பட்டன சபை நடவடிக்கைகள்

நாடாளுமன்றத்தில் இன்று ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் சர்ச்சை நிலை ஏற்பட்டதையடுத்து சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஆரம்பத்திலேயே ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் 2

ரம்புக்கனை சம்பவத்துக்குப் பொறுப்பேற்று

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடனடியாகப் பதவி விலகவேண்டும்

சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



புதிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உடன் பதவி விலக வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாட்டை மீட்டெடுப்பதற்கு 20 ஐ ஒழிக்க வேண்டும்!

மைத்திரி வலியுறுத்து

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு 20 ஆவது அரசியல் திருத்தத்தை இல்லாதொழித்து 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைக்கு புதிய அமைச்சரவை நியமனம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்போவதில்லை என்று 2

## எதிரணிக்கு மீண்ட மூவர்

முன்னதாக அரசாங்கத்திற்கு ஆதரவினை வழங்கியிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இனி அரசாங்கத்தை ஆதரிக்க போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், இஷாக் ரஹுமான் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் இனி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில்லை என தீர்மானித்துள்ளனர்.

## ராஜபக்ஷ குடும்பத்தினர் இனி வீதியில் இறங்கவே முடியாது!

ஜே.வி.பி. தெரிவிப்பு

ராஜபக்ஷ குடும்பத்தினர் வீதியில் இனிமேல் இறங்க முடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் தனி ஒரு 2

## ரம்புக்கனை சூட்டில் ஒருவரே மரணம் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் மூவர்

ரம்புக்கனை பகுதியில் நேற்று இடம் பெற்ற கலவரத்தில் ஒருவரே உயிரிழந்தார். காயமடைந்த 33 பேர் தொடர்ந்து கேகாலை மற்றும் கண்டி வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

13 பொதுமக்கள் தற்போது கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் 2

## ரம்புக்கனை வெறியாட்டம்: பிரதமர் மஹிந்த கவலை!

விசேட விசாரணைக்கும் உத்தரவு



ரம்புக்கனையில் நேற்று போராட்டம் நடத்திய மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் தொடர்பில் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

டுவிட்டரில் 2

## அமைதியாக எதிர்ப்பு வெளியிடும் உரிமை மறுக்கப்பட மாட்டாதாம்!

ஜனாதிபதி கோட்டாபய கூறுகின்றார்

ரம்புக்கனையில் இடம்பெற்ற அனர்த்தத்தைத் தொடர்ந்து, அமைதியாக எதிர்ப்பை வெளிப்படுத்தும் பிரஜைகளின் உரிமைக்கு எந்த விதத்திலும் இடையூறு ஏற்படுத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

ரம்புக்கனையில் நேற்று இடம் பெற்ற அனர்த்தம் தொடர்பில் அவர் தனது டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். 2

## காலி - மாத்தறை பிரதான வீதியில் போக்குவரத்து தடை

காலி - மாத்தறை பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

காலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் பிரதேச மக்கள் முன்னெடுத்து வரும் ஆர்ப்பாட்டம் 2

## நாட்டை மீட்டெடுப்பதற்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்த அவர், தமது காலத்தில் கொண்டுவரப்பட்ட 19ஆவது அரசமைப்பு திருத்தம் மீளவும் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள், 11 கட்சிகளின் எம்பிக்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எம்.பிக் கள் குழுவொன்றும் தற்போது ஒன்றாக எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ள தைக் காணமுடிகின்றது.

பொருளாதார, அரசியல் நெருக்கடிக ளுக்கு மத்தியிலேயே இந்தத் தீர்மா னத்தை எடுக்கவேண்டியேற்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினை களை எதிர்கொண்டுள்ள நிலையில் புதிய அமைச்சரவையை அமைப்பதன் மூலம் அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை.

கட்சி பேதமின்றி அனைவரும் ஒன் றிணைந்தே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். அரசிலுள்ள அனை வரும் பதவி விலக வேண்டும் என்றும், புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண் டும் என்றுமே நாட்டு மக்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறெனினும் சபையில் நாம் 40 பேரும் எதிர்க்கட்சித் தலைவர் தலைமை யிலான குழுவாக எதிர்க்கட்சியில் அமர வில்லை. நாம் எதிர்க்கட்சியில் சுயாதீன குழுவாகவே செயற்படுவோம்.

நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதி கரித்துச் செல்கின்ற நிலையில் மக்கள் பெரும் ஆத்திரமடைந்துள்ளனர். அமைச் சரவை மாற்றத்தின் ஊடாக இவர்களின் போராட்டத்தை நிறுத்த முடியாதென்பது தெரிகின்றது.

தற்போதைய அரசு கடந்த இரண்டு வருடங்களில் செய்த அனைத்து வேலைத்திட்டங்களிலும் தோல்விய டைந்துள்ளது.

அதனால் மக்கள் இந்த அரசை முழு மையாக விலக வேண்டும் என்றே கூறுகின்றனர். அதேநிலைப்பாட்டிலேயே சுதந்திரக் கட்சியும் உள்ளது.

நாட்டுக்கான வேலைத்திட்டங் களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கு வோம்.

20 ஆவது திருத்தத்தை நீக்கி எமது ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மீளக் கொண்டுவரப்பட வேண்டும் - என்றார்.

## ரம்புக்கனை கூட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நால்வர் உயிரிழந்தனர் என இன்று காலை காலைக்கதிரில் வெளியான செய்தி தவறானது என்று சுட்டிக்காட் டப்படுகின்றது. ஒருவர் உயிரிழக்க, மூவர் படுகாயமுற்ற நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத் தப்பட்டனர் என்பதே உண்மையாகும்.

இதேவேளை நேற்றைய அமைதி யின்மையில் 20 பொலிஸ் உத்தியோ கத்தர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

அத்தோடு அவர்களில் 14 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்போது சிகிச்சைக் காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட் டுள்ளது.

ரம்புக்கனையில் இச்சம்பவங்களை அடுத்து பதற்றம் ஏற்பட்ட நிலையில் மறு அறிவித்தல்வரை அப்பகுதி முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் குறிப்பு -
மேற்படி சம்பவத்தில் நால்வர் உயிரி ழந்தனர் என இன்று காலை தலைப்புச் செய்தி தவறாக வெளியானமைக்காக எமது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ - ர்)

## ராஜபக்ஷ குடும்பத்தினர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குடும்பமாக இருக்கும் திருடர்களைப் பாதுகாப்பதற்குப் பொலிஸாரும் இரா ணுவத்தினரும் துணை போகவேண் டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்பு கின்றோம்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டிலி ருந்து தப்பிச் செல்வதற்கு இடமளிக்காத வகையில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றேன்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் வீதியில் இனிமேல் இறங்க முடியாது. அவர்கள் ஹோட்டல்களிலோ, வீடுகளிலோ, எங் கேனும் தனி அறைகளிலோ அல்லது நிலத்தின் கீழான பங்கர்களிலோ பதுங்கி யிருக்க முடியுமே தவிர வெளியில் அவர் கள் தலைகாட்ட முடியாது.

அவர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றாலும் வெளிநாட்டுப் பொலிஸாரின் உதவியோடு அல்லது வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியோடு அவர் களை இலங்கைக்கு அழைத்து வரு வோம் - என்றார்.

## காலி - மாத்தறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக இவ்வாறு போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, பசறை - செங்கலடி பிரதான வீதியிலும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

## அமைதியாக எதிர்ப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துன்பியல் நிலைமையை ஏற்படுத்திய இச்சம்பவம் தொடர்பில் மிகுந்த கவலை அடைகின்றேன். இச்சம்பவம் குறித்து பக்கச்சார்பற்ற, வெளிப்படையான விசா ரணை நடத்தப்படும். எதிர்ப்பு தெரி விக்கும் அனைத்து பொதுமக்களையும் வன்முறையை தவிர்க்குமாறு வேண்டு கிறேன். - என ஜனாதிபதி தனது டுவிட் டர் பதிவில் மேலும் கோரியுள்ளார்.

## ரம்புக்கனை வெறியாட்டம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்தொன்றை வெளியிட்டுள்ள பிரத மர், ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்ப வத்தால், தாம் மிகுந்த வருத்தம் அடைந் துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை நடத்தப்பட வேண்டும் என வும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

## பொதுமக்கள் பாதுகாப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள் ளார். அத்துடன், காயமடைந்த மேலும் 11 பேர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இதற்குக் கண்டனம் வெளியிட்டு தனது டுவிட்டரில் பதிவிட் டுள்ள பதிவிலேயே இரா.சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்க பதவி யேற்று 48 மணித்தியாலங்களில் ஒரு உயிர் பலி எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று பிரசன்ன ரணதுங்க, உடன் பதவி விலக வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கைக்கு நெருக்கடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்தினம் திங்கட்கிழமையன்று கலந் துரையாடிய போதே இந்த விடயம் தெரி விக்கப்பட்டது.

மோசமான பொருளாதார நெருக்கடி களை எதிர் கொண்டிருக்கும் இலங்கை, அப்பிரச்சினையை அதன் அரசு கையாண்ட விதத்தை ஒட்டி பல எதிர்ப்புப் போராட்டங்களையும் எதிர்கொண்டிருக் கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒத்திவைக்கப்பட்டன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டு மாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

அதன் பின்னர் மேற்படி சம்பவம் தொடர்பில் சபையில் எதிரணி உறுப்பி னர்கள் கருத்துக்களையும் முன்வைத்த னர்.

இதையடுத்து இவ்விவகாரம் தொடர் பில் சபையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதனால் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதற்கு சபா நாயகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## நாட்டை ஆள .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரம்புக்கனைத் தாக்குதலின் உண் மைகளை மூடிமறைக்க வேண்டாம். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை உடன டியாக நாடாளுமன்றத்துக்கு அழைக்க வேண்டும். அவர்கள் உண்மைச் சம்ப வங்களை வெளியில் சொல்ல வேண் டும்.

அரசின் - அரச பயங்கரவாதச் செயற் பாடுகளுக்குப் பாதுகாப்புத் தரப்பினர் துணைபோகக்கூடாது. நாட்டையும், மக் களையும் காக்க வேண்டிய பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கு இருக்கின்றது - என்றார்.

## கோட்டா - மஹிந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் பதவி விலக வேண்டும் என வலி யுறுத்தி காலிமுகத்திடலில் 12 ஆவது நாளாகவும் இன்று போராட்டம் தொடர் கின்றது.

இதற்கு ஆதரவு தெரிவித்து நாட்டில் பல பகுதிகளில் இன்று போராட்டங்கள் இடம்பெற்ற நிலையில், 300 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஹர்தாலுக் கும் அழைப்பு விடுத்திருந்தன. இதனை ஏற்று பல பகுதிகளில் கடைகள் மூடப்பட் டன. இதனால் இயல்பு நிலை ஸ்தம்பிக் கப்பட்டது.

மலையகத்தில் பல பகுதிகளில் வீதி மறியல் போராட்டங்கள் இடம்பெற்றதால் பெரும் பதற்ற நிலையும் ஏற்பட்டது. பாது காப்பும் பலப்படுத்தப்பட்டு, பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

## 5 வயது சிறுவன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர்.

திருகோணமலையில் இருந்து வவு னியா நோக்கிப் பயணித்த பாரவூர்தியை முந்திச் செல்ல முற்பட்ட காரே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

நேற்றிரவு 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த காரில் பய ணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் காயமடைந்தமையுடன், 5 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்தவர்களில் உயிரிழந்த சிறுவனின் தாய் மற்றும் தந்தை ஆகி யோருடன் மேலும் ஒருவரும், மஹதி வுல்வெள பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச் சைக்காக திருகோணமலை பொதுவைத் தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அத்துடன் 4 பேர் மஹதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான விசாரணை களை மொரவெவ பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (முன்னர் வந்த செய்தி கிழக்குச் செய்திப் பக்கத்தில்)

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

ENGLISH CLASSES
யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ஏமாளி மக்கள் நாம்

'குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள்; குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்' என்பார்கள். இதில் யார் பெரிய முட்டாள் என்பது கூற முடியாதது.

எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைமையும் இதுதான். அரசியல் செய்வதற்காக அவர்கள் வாங்கும் குட்டுக்கள் பார்ப்பதற்கு அவமானகரமானவையாகவும், வேடிக்கையான வையாகவும் இருக்கும்.

மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் தினம், தியாகி திலீபன் தினம் என்று தமிழர்களின் நினைவேந்தல் தினங்கள் வரிசையாக வருவதும், அவற்றை ஒட்டி அஞ்சலி செலுத்துவதற்கு அரசியல் தலைவர்களை ஒன்று கூட விடாது தடுக்கும் உத்தரவுகளை பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாக பெறுவதும் வழமையாகி விட்டது.

பொலிஸாரால் இந்த உத்தரவுகள் தமக்கு வழங்கப்படுவதிலிருந்து நினைவேந்தலுக்கு போகவிடாமல் பொலிஸார் தம்மைத் தடுப்பது வரை எல்லா விடயங்களையும் போட்டோ பிடித்து, செய்தியாக்கி, அவற்றை அரசியல் பிரசாரமாக்கி விடுவதிலும் நமது தலைவர்கள் படு சூரர்கள்.

தியாகத் தீயில் கலந்துவிட்ட அந்தப் பெருந்தகையை அல்லது பெருந்தகைகளை நினைவேந்தும் உண்மையான – மனப்பூர்வமான – விருப்பம் அல்லது ஈடுபாடு நமது தலைவர்களுக்கு இருக்கின்றதோ இல்லையோ, விவகாரம் தொடர்பில் தத்தமது முக்கியத்துவத்தை முன்னிறுத்தி செய்தியாக்கி பிரபலம் தேடிக் கொள்வதில் மட்டும் அவர்கள் பின் நிற்பதில்லை.

இதுதான் நமது பட்டறிவு.

அத்தகைய வரிசையில் நேற்று அன்னை பூபதி நினைவேந்தல் விடயமும் பிரசாரம் ஆக்கப்பட்டு கடந்து சென்றுவிட்டது.

அன்னை பூபதி ஒரு தாய். ஆயுதம் தாங்கிய போராளி அல்லர். அல்லது ஆயுதம் தாங்கிய இயக்கம் எதனையும் சேர்ந்தவரும் அல்லர். மாறாக, ஆயுத மோதலை நிறுத்தச் சொல்லி அகிம்சை வழியில் உண்ணாநோன்பு இருந்தவர். வன்முறைக்கு எதிராகத் தன்னை ஆகுதியாக்கியவர்.

அத்தகையவரின் கல்லறைக்கு, அவரின் ஈகத்தை நினைவில் நிறுத்தி, அவரது நினைவு தினத்தன்று அஞ்சலி செலுத்த செல்வதை எந்த சட்ட ஏற்பாட்டின் கீழும் தடுக்க முடியாது. தடுக்க முகாந்திரமும் இல்லை. கொரோனாப் பரவலுக்கு ஏதுநிலை உண்டு என்று குறிப்பிட்டுத் தடுப்பது கூட நிஜத்தில் சாத்தியமில்லை.

அப்படி இருக்கையில் தடை உத்தரவை நீதிமன்றம் மூலம் பொலிஸ் பெற்றது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் நீதிமன்றத்தை பொலிஸ் தவறாக வழி நடத்தியது என்பதுதான். அந்த விடயத்தை – நீதிமன்றத்தைத் தவறாக வழி நடத்தி பொலிஸ் பேரினவாத அரசியல் செய்கின்றது என்பதை –சட்டரீதியாக நிரூபிக்கவும், அத்தகைய தடை விதிக்கும் முயற்சிகளுக்கு நிரந்தரமாக சட்டரீதியான ஆப்பு வைக்கவும், தடைவிதித்தமைக்கான நஷ்டஈட்டை – நிவாரணத்தை –பொலிஸ் தரப்பிடம் இருந்து அறவிடவும், அத்தகைய தடை விதிக்கும் நடவடிக்கை எடுத்தமைக்காகப் பொலிஸை பகிரங்க மன்னிப்பு கோரச் செய்யும் நீதித்துறை உத்தரவை பெறவும், இது நல்லதொரு சந்தர்ப்பம்.

அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கக்கூடிய 'சட்டமா அதிபர்' தரத்திலான சட்டத்தரணிகளை கொண்டிருக்கும் நாம் அதை செய்யப்போவதில்லை. இந்த விடயத்தை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தி, ஒரு நிரந்தர சட்ட உத்தரவை பெறவும் முயற்சிக்கப் போவதில்லை.

மாறாக, அடுத்த தடவை அன்னை பூபதியின் நினைவு தினம் வரும் வரைக் காத்திருப்போம். மீண்டும் நீதிமன்றத்தை தவறாக வழி நடத்தி பொலிஸ் தடை உத்தரவு எடுத்து வருகையில் அதை பெறுவதையும், பின்னர் நினைவேந்தல் செய்யப் போகும் போது பொலிஸ் தடுக்கையில் அதற்கெதிராக பொலிஸாருடன் தர்க்கிப்பதையும் படங்களாகப் பிடித்து பிரசாரமாக்குவோம்.

இந்த தடவையாவது, இந்தத் தடையை இத்துடன் விட்டு விடாமல், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து, தீர்க்கமான முடிவு கண்டு, பொலிஸாரை உரிய முறையில் சட்டத்தில் சிக்கவைக்கும் நடவடிக்கையை – ஏற்பாட்டை – உறுதியோடு செய்யும் அரசியல் திராணி, வலு, துணிவு, திடசங்கற்பம் நமது அரசியல் தலைவர்களிடம் வருமா என்பது சந்தேகம்தான். ஏமாளி மக்களாக நாம் இருக்கும் வரை, நமது மோசக்கார தலைவர்கள் பிரயோசனமாக ஏதும் செய்யப் போவதில்லை –தங்களுடைய செல்வாக்கை வளர்க்கும் தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதை தவிர.

## ஈஸ்டர் தாக்குதல்களின் 3 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட ஆராதனைகள்

நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி அடிப்படைவாதிகளால் கத்தோலிக்க தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் உள்ளிட்டவற்றை இலக்கு வைத்துதற்கொலைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு நாளையுடன் 3 ஆண்டுகள் நிறைவடைய வுள்ளமையைமுன்னிட்டு, கொழும்பு பேராயர் இல்லத்தால் விசேட ஆராதனைகள் மற்றும் நினைவுகூரல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய கொழும்பு -கொச்சிக்கடை புனித அந்தோணியார் திருத்தலத்தில் காலை 8.30 மணிக்கு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகளின் வருகையும், 8.40 மணிக்கு நிகழ்விற்கான அறிமுகமும், 8.45 மணிக்கு 2 நிமிட மௌன அஞ்சலியும், 8.47 மணிக்கு மெழுகு வர்த்திகளை ஏற்றி தேவாலய மணிகளை ஒலிக்கச் செய்தலும், 8.50 மணிக்கு சர்வமத வழிபாடுகளும், அதன்பின்னர் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் மக்களுக்கான விசேட உரையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 9.45 மணிக்கு இறை வழிபாடும், 11 மணிக்கு ஏழைகளுக்கு உணவு வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த விசேட நிகழ்வுகள் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெறவுள்ள நிலையில், இதில் இலங்கைக்கான வத்திக்கான் அபோஸ்தலிக தூதரக ஆண்டகை அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், கன்னியாஸ்திரிகள், பௌத்த மத குருமார் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதல்களின்போது பாதிக்கப்பட்டோரது குடும்ப அங்கத்தவர்கள், தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தந்த நாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளமை விசேட அம்சமாகும்.

புனித அந்தோணியார் திருத்தலத்தில் இந்த விசேட நிகழ்வுகள் நிறைவுபெற்றதன் பின்னர் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்கான நீர்கொழும்பு – கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்திலும் விசேட ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய பேராயர் தலைமையில் மாலை 3.30 மணி முதல் 4 மணி வரை பிரார்த்தனைகளும், கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் அமைதிப்பேரணி, 5 மணியளவில் நீர்கொழும்பு பஸ் தரிப்பிடத்திற்கு அருகிலுள்ள புனித ஜோசப்பாஸ் திருச்சொரூபத்துக்கு அருகில் நிறைவடையும். அதனையடுத்து அங்கு விசேட நினைவுகூரல் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த 325 ஊழியர்கள் உணவு நஞ்சானமையால் வைத்தியசாலையில் சேர்ப்பு

கொக்கலை ஆடைத் தொழிற்சாலையில் பணி புரியும் 325 ஊழியர்கள் கராபிடிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உணவு நஞ்சானமை காரணமாக அவர்கள் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு வாந்தி, மயக்கம்போன்ற அறிகுறிகள்தென்படுகின்றன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பில் காலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பவுஸர்கள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தல்

### அமைச்சர் விரைந்து செயற்பாடு



அனைத்து எரிபொருள் பவுஸர்கள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்துக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, எரிபொருள் போக்குவரத்து பவுஸர்களை தடுத்து சேதப்படுத்துவதை தவிர்க்குமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

அனைத்து எரிபொருள் போக்குவரத்து பவுஸர்கள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு தடையின்றி போராட்டங்கள் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ரம்புக்கனை சம்பவம் தொடர்பாக ஆராய மனித உரிமை ஆணைக்குழுவால் குழு

ரம்புக்கனை சம்பவம் தொடர்பாக ஆராய மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டியில் உள்ள அலுவலகத்திலிருந்து விசேட குழுவொன்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து, ரம்புக்கனையில் செவ்வாய்க்கிழமை காலை முதல் மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அத்துடன், காயமடைந்த 28 பேர் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காலி, மாத்தறை, கம்புறுபிட்டிய, அக்குரஸ்ஸ, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, அம்பலாங்கொடை, ஹற்றன், கொட்டகலை, சிலாபம், ஹப்புத்தளை, பண்டாரவளை, எல்பிட்டிய, அநுராதபுரம், மினுவாங்கொட, கெஸ்பேவ, பண்டாரகம, பத்தரமுல்லை உள்ளிட்ட பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# பலஸ்தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்



இஸ்ரேல் - பலஸ்தீனர்களிடையே அண்மைக்காலமாக தீவிரமடைந்து வரும் மோதல்களை அடுத்து பலஸ் தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் நேற்று கடும் விமானத் தாக்குதல் களை நடத்தியது.

இஸ்ரேல் அத்துமீறி தொடர்ச்சியாக பலஸ்தீன பகுதிகளை ஆக்கிரமித்து வரும் நிலையில் பலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகிக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேல் இராணு வத்துக்கும் இடையே நீண்டகாலமாக மோதல்கள் நீடித்து வருகின்றன.

இந்நிலையில், சமீப நாள்களாக இஸ்ரேல் ஆக்கிரமிப்பு ஜெருசலேம் நகரில் இஸ்ரேல் பொலிஸாருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையிலான மோதல் அதிகரித்தது. குறிப்பாக, ஜெரு சலேம் நகரில் உள்ள அல் அக்சா மசூ திக்கு அருகே நடந்த மோதல்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பொலி ஸாரின் இந்த வன்முறையை கண்டித்து ஹமாஸ் போராளிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இஸ் ரேலின் தெற்கு நகரம் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினர்.

எனினும், இஸ்ரேல் வான் பாது காப்பு அமைப்பு அந்த ரொக்கெட்டை நடுவானிலேயே இடைமறித்து அழித்து விட்டதாக இஸ்ரேல் இராணு வம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே ரொக்கெட் தாக்குதலுக்கு பதிலடியாக காசா நகர் மீது வான் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. காசாவில் ஹமாஸ் போராளிகளின் ஆயுத உற்பத்தி தளத்தை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், இந்த வான்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் இல்லை.

யூதர்கள் - முஸ்லிம்கள் ஆகிய இரு பிரிவினரும் தமது புனித தல மாக கருதி வரும் ஜெருசலேம் அல்-அக்ஸா மசூதி வளாகத்தில் இரு தரப்பினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு அல்-அக்ஸா வளாகத்தில் ஏற்பட்ட மோதலின் விளைவாக இஸ்ரேலுக்கும், பலஸ்தீன - ஹமாஸ் படையினருக்கும் இடையே 11 நாள்கள் போர் நடைபெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களில் இஸ்ரேலிய அரேபி யர்கள் மற்றும் பலஸ்தீனியர்கள் இஸ்ரேலில் அடுத்தடுத்து நான்கு தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் 12 இஸ்ரேலியர்கள் மற்றும் இரண்டு உக்ரேனியர்கள் கொல் லப்பட்டனர். கடந்த 15 ஆண்டுக ளுக்கும் மேலாக இஸ்ரேலில் நடந்த மோசமான தாக்குதல்களாக இவை பதிவாகியுள்ளன. மார்ச் மாத இறுதி முதல் இஸ்ரேல் - பலஸ்தீனர்களி டையே இடம்பெற்றுவரும் வன்முறை களில் இதுவரை இரு தரப்பிலும் 36 பேர் கொல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானில் பாடசாலை அருகே குண்டுத்தாக்குதல்; 6 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானின் மேற்கு காபூலில் நேற்று, உயர்நிலைப்பள்ளி ஒன்றில் மூன்று குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன எனவும் இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும், ஆப்கான் பாதுகாப்பு மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என, ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரி வித்துள்ளது.

இப்பகுதிக்கு அருகாமையில் வசிப்ப வர்களில் பெரும்பாலானோர், மத மற்றும் இன சிறுபான்மையினரான ஷியா ஹசாரா சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள், சன்னி தீவிரவாத குழுக்களால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாவர்களாவர்.

உயர்நிலைப்பள்ளியில் மூன்று குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. ஷியா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இதில் உயிரிழந்துள்ளனர் என, காபூல் கமாண் டரின் செய்தித்தொடர்பாளர் காலித் ஸத் ரான் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலில் குறைந்தது 4 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும், 14 பேர் காயமடைந்திருக்கலாம் எனவும், பெயர் தெரிவிக்க விரும்பாத மருத்துவமனை ஒன்றின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் தெரிவித்துள்ளார் என, ராய்ட் டர்ஸ் முகமை தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலுக்கு இன்னும் எந்த தீவிரவாத குழுவும் பொறுப்பேற்கவில்லை.

இதனிடையே, அப்துல் ரஹீம் ஷாஹித் உயர்நிலை பள்ளிக்கு அருகில் இத்தாக் குதல் நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ள ஏ.பி. செய்தி முகமை, இத்தாக்குதலில் 7 குழந்தைகள் வரை காயமடைந்தி ருக்கலாம் என தெரிவித்துள்ளது.

## தென்னாபிரிக்காவில் வெள்ளம் 443 பேர் பரிதாபகரமாக சாவு

தென் ஆபிரிக்காவில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்திற்கு இது வரை 443 பேர் பலியாகி உள்ளனர். இன்னும் பலர் மாயமாகி இருக்கின்ற னர்எனதகவல்கள் வெளியாகிஉள்ளன.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் தரப்பில், தென் ஆபிரிக்காவின் குவாசுலு - நடால் மாகாணத்தில் கடந்த சில நாள்களாக பெய்த மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டுள் ளது. வெள்ளத்தில் சிக்கி இதுவரை 443 பேர் பலியாகி உள்ளனர். பலர் மாயமாகி உள்ளனர். மாயமானவர் களைக் கண்டறியும் பணியில் பேரிடர் மேலாண்மைக் குழுவினர் ஈடுபட்டுள் ளனர். வெள்ளத்தில் மருத்துவம னைகள், பள்ளிகள் ஆகியவை நாசமா கியுள்ளன. இதில் சேதமடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை மட்டும் 500 வரை இருக்கும். வரும் நாள் களில் மழையின் அளவு குறையும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குவாசுலு - நடால் மாகாணத்தின் ஆளுநர் சிஹ்லே ஜிகலலா கூறும் போது, கடந்த வாரம் பெய்த மழை அனைத்தையும்நாசம்செய்துவிட்டது. துறைமுகப் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. உயிரிழப்புகள், வீடுகள், உள்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன. இந்த இயற்கை பேரழிவு மாகாணத்தின் பதிவு செய்யப்பட்ட வரலாற்றில் மிக மோச மான ஒன்றாக மாற்றியுள்ளது என்று தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக பல இடங் களில் சாலைகள் துண்டிக்கப்பட் டுள்ளன. இதனால் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தி னால் 40,000 பேர் வீடற்றவர்களாக மாறி உள்ளனர். வெள்ள நிவாரண நடவடிக்கையாக முதற்கட்டமாக சுமார் 6.8 கோடி டொலர்களை தென் ஆபிரிக்க அரசு அறிவித்துள்ளது



## கிரெமின்னாவை கைப்பற்றியது ரஷ்ய ராணுவம்

உக்ரைனின் கிழக்குப் பகுதி நகரமான கிரெமின் னாவை ரஷ்ய ராணுவம் கைப்பற்றி இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யாவின் தாக்குதல் 50 நாள்க ளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்த நிலையில், கீவின் ஆயுதப்படைகள் அருகிலுள்ள ரூபிஜ்னே குடியேற்றத்தில் ரஷ்யப்படைகள் மீது தாக்குதல் நடத் தின. கிரெமின்னாவில் ஞாயிறு முதல் திங்கள் வரை இரவில் பெரிய தாக்குதல் நடந்தது என்று லுகான்ஸ்க் பிராந்திய ஆளுநர் செர்ஜி கெய்டே ஊடகத்திற்கான அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார். அந்த அறிக் கையில், ரஷ்ய ராணுவம் ஏற்கனவே பெரிய அளவி லான ராணுவப் பொருள்களுடன் அங்கு நுழைந்து விட்டன. எங்கள் பாதுகாவலர்கள் புதிய நிலைக்கு பின்வாங்கி விட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் பாதுகாப்பு கவுன்ஸில் செயலாளர் ஒலெக்ஸி டானிலோவ் கிழக்கில் ரஷ்யா நடத்தியுள்ள தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், டோனெட்ஸ்க், லுகான்ஸ்க் மற்றும் கார்கிவ் பிராந்தியங்களில் ரஷ்யப்படைகள் எங்கள் பாதுகாப்புகளை உடைக்க முயன்றனர். அதிர்ஷ்டவச மாக எங்கள் ராணுவம் இன்னும் அவையை விட்டுத் தரவில்லை. ஆனாலும் அவர்கள் கிரெமின்னா மற்றும் இன்னுமொரு சிறிய நகரத்தைக் கைப்பற்றி விட்டனர். சண்டை தொடர்ந்து கொண்டிருக்கிறது. நாங்கள் சரணடையவில்லை என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் கார்கிவ் பகுதியில் ரஷ்யா நடத்திய புதிய குண்டுவீச்சுத் தாக்குதலில் 3 பேர் கொல் லப்பட்டனர், 15 காயமடைந்துள்ளனர் என்று அந்த பிராந்தியத்தின் ஆளுநர் ஒலெக் சினெகுபோவ் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரிமாத இறுதியில் தொடங்கிய படையெடுப்பின் போது தலைநகர் கீவ்வை சுற்றி நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யப் படைகள் தற்போது பின்வாங்கி உக்ரைனின் கிழக்கு டான்பாஸ் பகுதியைக் கைப்பற்ற தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# மீண்டும் அதிகரிக்கும் கொரோனாத் தொற்று கண்காணிப்பை தீவிரப்படுத்த நடவடிக்கை



## இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

அண்மைய நாள்களில் இந்தியாவில் கொரோனாப் பரவல் அதிகரித்துவருவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இது குறித்து, மத்திய சுகாதார செயலாளர் ராஜேஷ் பூன் நேற்று, ஹரியானா, உத்தரப்பிரதேசம், டெல்லி, மகாராஷ்டிரா மற்றும் மிசோரம் அரசுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த இரு மாதங்களில் இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கையில் நிலையான மற்றும் குறிப்பிடத்தக்க சரிவைக் கண்டுள்ளது. ஆயினும், கடந்த சில வாரங்களாக நாட்டில் தினசரி 1,000 புதிய தொற்று பாதிப்புகள் பதிவாகியுள்ளன. அண்மையில் இந்தியாவின் சில மாநிலங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் இதுவரை அடைந்த வெற்றிகளை இழக்காமல், தடுப்பு நடவடிக்கையை பின்பற்றுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

தொற்றுநோய் பரவுவதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் கொரோனா தடுப்பை விரைவாகவும் திறமையாகவும் நிர்வகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

தடுப்பூசி, கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பது, நெரிசலான பகுதிகளில் முகக்கவசம் அணிவது உள்ளிட்டவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். புதிய கொரோனா பாதிப்புகளை கண்காணிக்கவும், தொற்று பரவுவதை குறைக்க தேவையான கட்டுப்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ளவும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறது, என்று அந்தக் கடிதத்தில்,இந்திய மத்திய சுகாதார செயலாளர் ராஜேஷ் பூன் தெரிவித்திருக்கிறார்.

# கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டுகோள் விடுப்பு

## நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனால்



தமிழகத்தின் அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் கொரோனா பரவல் தொடர்பாக அறிவித்தல்களை உள்ளடக்கிக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா தடுப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் எனவும்,முகக்கவசம், கொரோனா தடுப்பூசி போடும் பணிகளை உரியமுறையில் முன்னெடுக்கவேண்டும் எனவும் அவர் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்.

டெல்லி, உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா போன்ற பகுதிகளில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கும் நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அவர் தனது கடிதத்தில் அறிவுறுத்தி உள்ளார்.

# இளையராஜாவை மேலும் காயப்படுத்தாமலிருப்பது பெருந்தன்மையானதென விஜயகாந்த் அறிக்கை



கடந்த சில தினங்களுக்கு முன்பு பிரபல இசையமைப்பாளர் இளையராஜா, பிரதமர் நரேந்திர மோடியை அம்பேத்கருடன் ஒப்பிட்டு வெளியான புத்தகம் ஒன்றிற்கு எழுதிய முன்னுரையில் தனது கருத்தைச் சொல்லியிருந்தார். அவரது கருத்துக்கு எதிர்ப்பும் மற்றொரு தரப்பினர் ஆதரவும் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக தே.மு.தி.க. நிறுவனத்தலைவர் விஜயகாந்த் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

அண்ணல் அம்பேத்கர், பிரதமர் நரேந்திர மோடி, இசைஞானி இளையராஜா ஆகியோர் சாதாரண குடும்பத்தில் பிறந்து, இன்றைக்கும் அவரவர்கள் துறையில் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக உள்ளனர். ஒரு சூரியன், ஒரு சந்திரன். அதேபோலத்தான் இங்கு யாரையும் யாருடனும் ஒப்பிட்டுப் பேச முடியாது. அவர்களுக்கு நிகர் அவர்கள்தான்.

இளையராஜாவின் கருத்து தனிப்பட்ட கருத்து. கருத்து சுதந்திரம் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அதனை ஏற்றுக்கொண்டு மேலும் அவரை விமர்சனம் செய்து காயப்படுத்தாமல் இருப்பது பெருந்தன்மையானது, என விஜயகாந்த் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




# உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்திற்கு அடிக்கல் நாட்டினார் மோடி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் அரசு முறை பயணமாக குஜராத் சென்றுள்ளார். அங்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி 22,000 கோடி ரூபா மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ளார்.

ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்திற்கும் பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நாட்டினார்.

அந்த நிகழ்வில் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த், உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரஸ் அதனோம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிடமிருந்து மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு ரஷ்யா பேச்சு



ரஷ்யா - உக்ரைன் நாடுகளுக்கு இடையேயான போர் 55 ஆவது நாளாக நடைபெற்று வருகிறது. உக்ரைனின் முக்கிய நகரங்களை முற்றுகையிட்டுள்ள ரஷ்யா பல்வேறு யுக்திகளில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தப் போரினால் உலக அளவில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்யா மீது பல்வேறு நாடுகள் பொருளாதார தடையையும் விதித்துள்ளன. இதனால் ரஷ்யாவின் வணிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஐரோப்பா மற்றும் சீனாவில் இருந்து மருத்துவ உபகரணங்கள் கொள்முதலும் அந்த நாட்டில் குறைந்துள்ளது. இந்த நிலையில் இந்தியாவில் இருந்து மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கு ரஷ்யா முடிவு செய்துள்ளது.

வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள இணைய வழிச் சந்திப்பில் ரஷ்யா மற்றும் இந்திய மருத்துவ உபகரணங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் இது குறித்துப் பேச்சு நடத்தவுள்ளன. இந்த வணிகங்கள் டொலரில் இல்லாமல் ரூபிள் மற்றும் இந்திய ரூபாயில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikathir மாலைப்பதிப்பு



# அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்த சென்றோரைக் கலைத்த பொலிஸார்

## மட்டக்களப்பு நாவலடியில் சம்பவம்



அன்னைபூபதியின் 34 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று அவரின் கல்லறை அமைந்துள்ள மட்டக்களப்பு நாவலடி கடற்கரை ஓரம் அஞ்சலி செலுத்த சென்ற போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனின் கைகளிலிருந்த கற்பூரத்தை தட்டிவிட்ட பொலிஸார் அவரையும் அவருடன் வந்திருந்தோரையும் அங்கிருந்து கலைந்து செல்லுமாறு கடும் தொனியில் அச்சுறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக அங்கு சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா. சிறிநேசன் ஆகியோர் அங்கு குழுமி இருந்த காத்தான்குடி பொலிஸாருடன் சிறிது நேரம் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் பொலிஸாரின் அச்சுறுத்தல் காரணமாக அன்னை பூபதியின் உறவினர்கள், அவரது நினைவிடத்திற்கு சென்று நினைவுக்கூர்வதைத் தவிர்த்துள்ளனர்.

இதேவேளை நினைவிடத்திற்கு சென்றவர்களை அங்கிருந்த பொலிஸார் எச்சரித்து வெளியேற்றிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

அமைதிகாக்கும் படையணி என்ற பெயரில் நுழைந்த இந்தியப் படைகளை வெளியேறுமாறு வலியுறுத்தி 1988 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் திகதி அன்னை பூபதி ஆகாரமின்றி போராட்டத்தினை ஆரம்பித்திருந்தார்.


இந்தப் போராட்டத்திற்கு இந்திய அரசினால் எந்தவித சாதகமான பதிலும் கிடைக்காத நிலையில் ஏப்ரல் 19 ஆம் திகதி தியாக தீபம் அன்னை பூபதி உயிர் நீத்திருந்தார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 34 ஆம் ஆண்டு நினைவு நாள் அன்றைய தினம் தமிழர் தாயக மக்களின் வீடுகளிலும் புலம் பெயர் தேசங்களிலும் நினைவுக் கூரப்படுகின்றது.

எனினும் இம்முறையும் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அவரது சமாதியில் நினைவேந்தல்களை நடத்துவதற்கு பொலிஸார் நீதிமன்றத் தடையைப் பெற்றுள்ளனர். அன்னை பூபதியின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க வேண்டாம் என காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் தடை உத்தரவை பெற்றிருந்தனர்.

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணாக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், மாநகர முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இ.பிரசன்னா, இலங்கை தமிழரசு கட்சி வாலிபர் அணி தலைவர் கி.சேயோன், மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணி தலைவர் லோ.திபாகரன், சிவில் அமைப்பு தலைவர் ச.சிவயோகநாதன், வாழைச்சேனை குணசேகரம் ஆகிய 11 பேருக்கு எதிராக தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.





# வவுணதீவு கோப் நிலையம் தீயினால் எரிந்து சாம்பல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வவுணதீவில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட கோப் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ காரணமாக அங்கிருந்த பொருள்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை விற்பனை நிலையம் மூடப்பட்டதன் பின்னர் தீப்பரவல் ஏற்பட்டதை தொடர்ந்து வவுணதீவு பொலிஸாரும் மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைப்பு பிரிவும் இணைந்து தீயை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர்.

இதன்போது குறித்த வர்த்தக நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மற்றும் வர்த்தக நிலையத்திலிருந்த இலத்திரனியல் பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன என வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தீப் பரவலுக்கு மின் ஒழுக்குக் காரணமா அல்லது வேறு காரணங்கள் ஏதுவும் உள்ளனவா என்பது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ காரணமாக இந்த வர்த்தக நிலையத்திற்கு சுமார் 20 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் மக்களுக்கு மிகவும் விலை குறைந்த நிலையிலேயே பொருள்களை வழங்கிவந்தோம் எனவும் ஈச்சந்தீவு-கன்னங்குடா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் நாகலிங்கம் உருத்திரமூர்த்தி தெரிவித்தார்.

# முகநூல் ஊடாக நீதித்துறைப் பணிக்கு பாதிப்பாம்; நால்வருக்கு அழைப்பாணை

## கல்முனை நீதிவான் நீதிமன்று விடுத்தது

சட்டத்துறைக்கு – முகநூல் ஊடாகப் பங்கம் விளைவித்த – மருதமுனையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் நால்வருக்கு எதிராகக் கல்முனை நீதிவான் நீதிமன்றினால் நேற்று அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்துறையையும் சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தையும் அவமதிக்கும் வகையில் தொடர்ச்சியாக பல முகநூல் பதிவுகளையும், பின்னூட்டங்களையும் இட்டுவந்த நபர்களுக்கெதிராக கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணி எஸ். எச்.எம். மனார்த்தீனினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றைய தினம் எடுக்கப்பட்டது.

முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் முன்னிலையான சட்டத்தரணிகள் மேற்கொண்ட சமர்ப்பணத்தில் திருப்தியுற்ற நீதிவான் சம்பந்தப்பட்டோருக்கு அழைப்பாணை விடுக்க உத்தரவிட்டார். இந்த வழக்கில் பிரதிவாதிகளாக மருதமுனையைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் முபாறக், இப்றாலெப்பை முகம்மது றியாஸ், சேகு இஸ்மாயில் மௌஜூத், அஸான் மனாஸ் ஆகியோர் பெயர்குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களை எதிர் வரும் 25 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பிலிருந்து மூன்று பேர் தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண், சிறுமி, நான்கு வயது சிறுவன் என ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் தனுஷ்கோடிக்கு அகதிகளாக இன்று புதன்கிழமை அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடியைச் சென்றடைந்த இந்த இலங்கை தமிழர்களை மீட்ட மரைன் பொலிஸார் தனுஷ்கோடி மரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் மட்டக்களப்பில் இருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை ,நொச்சிக்குளம் பகுதியில் வான் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளமையுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# குடிவரவு – குடியகல்வு பிராந்திய காரியாலயம் முன்னால் நீண்டநேரம் மக்கள் காத்திருப்பு

## வவுனியாவில் பொறுப்பற்ற விதமாக அதிகாரிகள் செயற்பாடு





வவுனியா, குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய காரியாலயம் முன்னால் கடவுச் சீட்டு பெறுவதற்காக மக்கள் 5 மணித்தியாலத்துக்கு மேலாக வீதியில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் பொறுப்பற்ற விதமாக செயற்படுகின்றனர் எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, உள்வட்ட வீதியில் வடமாகாணத்துக்கான குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் புதிதாக கடவுச் சீட்டைப் பெறுதல், கடவுச் சீட்டை புதுப்பித்தல் உள்ளிட்ட தேவைகளுக்காக காலை 6 மணிக்கு முன்பிருந்தே மக்கள் காத்திருந்தனர்.

இந்நிலையில் காலை 8.30 மணிக்கு அலுவலகத்துக்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சுமார் 50 பேர் வரையில் கடவுச் சீட்டு வளாகத்துக்குள் அனுமதித்து விட்டு ஏனையவர்களை வீதியில் நிற்க வைத்தனர். வீதியில் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள் காலையில் இருந்து காத்து நிற்கின்ற போதும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ தமக்கு சரியான பதிலை வழங்காது நீண்ட நேரம் காத்து நிற்க வைத்துள்ளனர் என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் வட மாகாணத்தின் பல இடங்களில் இருந்தும் தாம் வருகை தந்துள்ள நிலையில், தாம் இன்று விண்ணப்பிக்க முடியுமா அல்லது முடியாதா என்பது கூடத் தெரியாது நீண்டநேரம் வீதியில் காத்து நிற்பதாகவும், குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் மக்களுக்கான இருக்கைகள் வெறுமையாக உள்ள போதும் எம்மை உள்ளே எடுக்காது வீதிகளில் நிற்க வைத்துள்ளனர்.

அத்துடன், ஒரு மணியுடன் அவர்கள் இனி உள்ளே எடுக்க முடியாது எனக் கூறி கடந்த சில நாள்களாகத் திருப்பி அனுப்பியமையால் சிலர் மூன்று தினங்களாக வருகை தந்து காவல் நிற்கின்ற நிலை கூட உள்ளது என பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் வினவிய போது, நாம் ஒன்றும் இங்கு சும்மா இருக்கவில்லை. வேலை நடைபெறுகிறது எனப் பதில் அளித்தனர்.

# ஈழத்தமிழ் மக்களுக்கான நேரடி உதவி பொறிமுறை!

## தமிழக முதலமைச்சருக்கு உருத்திரகுமாரன் கடிதம்

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள ஈழத்தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவுவதற்கு, அனைத்துலக சமூகத்தின் பங்குபற்றலுடன் ஒரு பொறிமுறையொன்றை உருவாக்குமாறு தமிழக அரசை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதியன்று கடிதமொன்றை அனுப்பியிருந்த பிரதமர் வி.உருத்திரகுமாரன், சிங்கள அரசாங்கங்கள் எவையும் தமிழ்மக்களைப் பாரபட்சமின்றி நீதியாக நடத்தப் போவதில்லை. இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவார்கள்.

இந்நிலையில் நேரடி உதவிப் பொறிமுறை உருவாகும் நிலை தோன்றின் புலம்பெயர் தமிழ் மக்கள், தமிழக மக்கள், உலகத் தமிழ் மக்கள் இணைந்து ஈழத்தமிழ் மக்களை இன்றைய நெருக்கடியில் இருந்து காப்பாற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தீவில் தமிழ்மக்கள் மீதான சிங்கள அரசாங்கங்களின் இனவழிப்புப் போரும், பெரும் இராணுவச் செலவீனங்களும், தவறான கொள்கைகளும், ஊழல் நிறைந்த நிர்வாகமும், கொரோனா உலகப்பெருந்தொற்று உருவாக்கிய தாக்கங்களும் இணைந்தே இப்பெரும் பொருளாதார நெருக்கடியை உருவாக்கியுள்ளதெனக் குறிப்பிட்டுள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், ஈழத்தமிழர் தேசம் சிங்கள பேரினவாத அரசால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு, இனவழிப்புப் போரால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்றைய நெருக்கடி இரட்டைச்சுமையாய் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழ் மக்களுக்கான ஒரு நேரடி உதவிப்பொறிமுறையை உருவாக்கும் முயற்சிக்குத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைத் தலைமை தாங்குமாறு கோரியிருந்த பிரதமர் வி.உருத்திரகுமாரன், இப்பொறிமுறையை உருவாக்கும் முயிற்சியைக் காலதாமதம் இன்றி ஆரம்பிப்பது ஈழத்தமிழ்மக்களுக்கு பெரும் நம்பிக்கையைத் தரும் எனத் தெரிவித்திருந்ததோடு, தமிழ்நாடு அரசின் சார்பில் ஈழத்தமிழர் தேசத்தின் உண்மை நிலையைக் கண்டறிவதற்கான குழு ஒன்றைஅங்குஉடன்அனுப்பிவைப்பதும் இந்த முயற்சிக்கு வலுச் சேர்க்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நேரடி உதவிப் பொறிமுறை ஊடாக ஈழத்தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கும் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

# தற்போதைய சூழ்நிலையில் ஆசிரியர் மீது நெருக்கீடுகளை ஏற்படுத்த வேண்டாம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் மத்திய, மாகாண கல்வி அமைச்சிடம் வேண்டுகோள்

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலை என்பது ஒட்டுமொத்த மக்களுக்குமானது. மக்களில் ஓரங்கமாகவே அதிபர், ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுக்கும் பல்வேறு நெருக்கடிகள் உள்ளன என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது வெறும் அலுவலகக் கடமையல்ல. மனித ஜீவன்களோடு பயணிக்கும் கடமை. இந்தக்கடமைகளில் இருந்து அதிபர், ஆசிரியர்கள் விலக முடியாது என்பதை நாம் உணர்ந்தவர்கள். ஆகையினாலேயே எமது கடமைகளை எவ்வேளையும் செய்யத் தயாராக இருக்கிறோம்.

இன்று முதல் நாட்டில் உள்ள 300 தொழிற்சங்கங்கள் ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுத்து, அதனை ஏற்ற போக்குவரத்து துறை சார்ந்தவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்களின் சேவை முடக்கத்தால் பாடசாலைகளுக்கான போக்குவரத்துகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனால் அதிபர், ஆசிரியர், மாணவர்களின் போக்குவரத்து வழிமுறைகளும்பாதிப்படைந்துள்ளன. இன்று பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகவே உள்ளது. நாட்டுநிலைமை பதற்றமாக உள்ளது.

# நிலக்கரி கப்பல்களுக்கு பணம் செலுத்தப்பட்டது

120,000 மெற்றிக் தொன் நிலக்கரியுடன் வந்துள்ள இரண்டு கப்பல்களுக்கு 3.8 கோடி அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நிலக்கரியை தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

அதேபோல், ஜெட் எரிபொருள் மற்றும் டீசல் தொகையை இறக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# எதிர்வரும் சில நாள்களுக்கு தேவையான பெற்றோல், டீசல் கையிருப்பில் உள்ளது

## அரசாங்கம் அறிவிப்பு

எதிர்வரும் சில நாள்களுக்கு தேவையான பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பில் உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இன்று (புதன்கிழமை) நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு படிப்படியாக தவிர்க்கப்பட்டு வருகின்றபோதும் எரிபொருள் போக்குவரத்தில் இன்னும் சிக்கல்கள் இருக்கின்றன என அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் 10 நாள்களுக்குத் தேவையான பெற்றோலும் எதிர்வரும் 14 நாள்களுக்கு தேவையான டீசலும் கையிருப்பில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

